


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.10.2025) சென்னை, ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில். தேசிய தன்னார்வ இரத்த தான நாள் 2025 நிகழ்வில், தன்னார்வ இரத்த தான முகாம் அமைப்பாளர்களுக்கும். வாழ்நாளிலில் 50 முறைக்குமேல் தன்னார்வ இரத்த கொடையாளர்களுக்கும். அதிக அளவில் தன்னார்வ இரத்த கொடையாளர்களை இணையவழியில் பதிவு செய்தவர்களுக்கும் பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகளை வழங்கினார். இதில் கோவையில் அதிக இரத்த தானம் வழங்கிய தளபதி இரத்தான இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் கழக தீர்மானக்குழு செயலாளருமான நா.கார்த்திக், ப.செந்தில்குமார், திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி. மரு.ஏ.சோமசுந்தரம், மரு.ஆர்.சுகந்தி இராஜகுமாரி, மரு.ஜெகதீசன். மரு.மணி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் வேலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறை தீர்ப்பு மற்றும் நலத்திட்டங்கள் வழங்கக்கூடிய நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சியில் ஆணையத்தின் தலைவர் சோ. ஜோஅருண், ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், சட்டப்பேரவை உறுப்பினர் கார்த்திக், மற்றும் உறுப்பினர்கள் கோவை முகமது ரஃபீக், நாகூர் நஜிமுதின், பிரவீன் டாட்டியா, ரமீத் கபூர், ராஜேந்திர பிரசாத், மேயர் சுஜாதா ஆனந்த குமார், மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட

# பாக ஒருங்கிணைப்பாளர்கள் (BoothCo-ordinators) BLA2, BLC, BDA, BYA கலந்துரையாடல் கூட்டம்!

### மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) BLA2, BLC, BDA, BYA கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமையில், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., மற்றும் மாதவரம் தொகுதி பார்வையாளர் ஜே.அருண் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ். மோகன் ஆகியோர் முன்னிலையில் கீழ்கண்ட அட்டவணைப் படி இந்நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

| வ.எண் | தேதி / நேரம் / கிழமை | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 1 | 10.10.2025 – வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி | சோழவரம் | ஆலய மகா மண்டபம் பாடியநல்லூர் |
| 2 | 11.10.2025 – சனிக்கிழமை மாலை 4.00 மணி | மாதவரம் தெற்கு பகுதி | இந்திராணி ஹனுமந்த மஹால், லட்சுமிபுரம், சென்னை–99 |
| 3 | 12.10.2025 – ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.00 மணி | புழல் ஒன்றியம் | M.V.M. திருமண மண்டபம் புழல் |
| 4 | 12.10.2025 – ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | B.K.T.மஹால் வேல் டெக் ஜங்ஷன் |
| 5 | 12.10.2025 – ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி | திருவொற்றியூர் மத்திய பகுதி | திருவள்ளுவர் திருமண மண்டபம் மணலி |
| 6 | 13.10.2025 – திங்கட்கிழமை காலை 10.00 மணி | செங்குன்றம் பேரூர் | ஜோதி ரேணுகா திருமண மஹால் செங்குன்றம் |
| 7 | 13.10.2025 – திங்கட்கிழமை மாலை 5.00 மணி | மாதவரம் வடக்கு பகுதி | ராகவேந்திரா திருமண மண்டபம் மாத்தூர் |
| 8 | 13.10.2025 – திங்கட்கிழமை மாலை 6.00 மணி | திருவொற்றியூர் மேற்கு பகுதி | வி.கே. மஹால் அஜாக்ஸ் திருவொற்றியூர் |
| 9 | 13.10.2025 – திங்கட்கிழமை மாலை 7.00 மணி | திருவொற்றியூர் கிழக்கு பகுதி | T.K.P. திருமண மண்டபம் திருவொற்றியூர் |

மேற்படி இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் /பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட கழக செயலாளர்கள்/ மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்/ உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்/ பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators), BLA2, BLC, BDA, BYA ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

## திருநின்றவூரில் அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட

# அரசு பேருந்து சேவை மீண்டும் இயக்கம்!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், அக். 11

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதியில் அதிமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட அரசு பேருந்து சேவையை தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் தொடங்கி வைத்தார். திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்கு உட்பட்ட திருநின்றவூர் பிரகாஷ் நகர் வடக்கு பகுதியிலிருந்து ஆவடிக்கு அரசு மினி பேருந்து இயங்கி வந்தது.

அதிமுக ஆட்சியின் போது இந்த பேருந்து சேவை நிறுத்தப்பட்டது மீண்டும் திமுக ஆட்சி பொறுப்பேற்ற நிலையில்

இந்தப் பேருந்து சேவை மீண்டும் தொடங்கிட வேண்டுமெனபாதிக்கப் பட்ட பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் பிரகாஷ் நகரிலிருந்து ஆவடி வரை செல்லும் மினிமாநகரப் பேருந்து

தடம் எண் : எஸ். 49 சேவையினை சிறுபான்மையினர்நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தொடங்கி வைத்து.பேருந்தில் பொதுமக்களுடன் பயணித்தார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துணை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவந்ததற்காக திராவிட முன்னேற்ற கழக அரசுக்கும் அமைச்சருக்கும் நன்றிகளை பொதுமக்கள் தெரிவித்துக் கொண்டனர்

இந்த நிகழ்ச்சியில் இதில் நகர் மன்ற தலைவர் உஷாராணி ரவி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, நகராட்சி ஆணையர் ஜீவிதா நகராட்சி பொறியாளர் குமார், போக்குவரத்துறை எட்வின், நிர்வாகிகள் கவுன்சிலர்கள் எஸ்.கமலக் கண்ணன், தெ.நாகராஜ், ஆர்.ரவி, சி.பாபு, வெங்கடேசன், உஷாராணி வெங்கடேசன், பி.எல்.ஆர்.யோகா, கோபால் பாஸ்கரன் ஏகாம்பரம் சந்தோஷ் குமார் ஜெயக்குமார், பட்டாணி கார்த்திக், பிரசன்னா, ஸ்ரீ வாட்சன், உள்பட அரசுத் துறை அதிகாரிகள் கழக கலந்து கொண்டனர்.

## பாலவாக்கம் கடற்கரையில் – சென்னையின் வளர்ச்சிக்காக

# பொதுமக்களுக்கு “நம்ம தங்கா” விழிப்புணர்வு சின்னம்!

### மேயர் ஆர்.பிரியா அறிமுகப்படுத்தினார்!

சென்னை,அக்.11-

சென்னையின் வளர்ச்சிக்கான விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்திடும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் “நம்ம தங்கா” விழிப்புணர்வு சின்னத்தினை நேற்று (10.10.2025) பாலவாக்கம் கடற்கரையில் நடைபெற்ற நிகழ்வில் மேயர் ஆர். பிரியா அறிமுகப்படுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இந்த நீல நிறக் காகம், சாதாரண பறவையாக இல்லாமல், மாநகராட்சியின் தூதுவராக மாநகராட்சியின் சேவைகளை மக்களிடையே கொண்டு சேர்ப்பதற்காகவும் மக்களுடன் சேர்ந்து சென்னையின் வளர்ச்சிக்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் நிறுவப்பட்டுள்ளது.

பனை மரத்தைப் போல செழித்து வளரக் கூடிய பொறுமையையும், சூறாவளிக்குப் பிறகும் மீண்டு நிற்கும் வலிமையையும் “நம்ம தங்கா” பிரதி பலிக்கும். “நம்ம தங்கா” - இது நம் நகரத்தின் உறுதியான அடையாளம்.

“நம்ம தங்கா” சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மையான சென்னை, நீர் சேமிப்பு, மரம் நடுதல் போன்ற நன்மை செயல்களில் மக்களை ஊக்குவிக்கும் தூதுவராக திகழும். சென்னையின் ஒற்றுமையையும், புத்துணர்ச்சியையும், வளர்ச்சியையும் குறிக்கும் ஒரு சின்னமாக உருவாக்கப்பட்டுள்ளது. அனைவரையும் இணைக்கும் தூதுவர், நம் நகரின் புதிய நண்பர், புதிய குரல், புதிய ஆற்றல் ஆகியவற்றின் சின்னம் “நம்ம தங்கா.



மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருங்குடி மண்டலம், பாலவாக்கம் கடற்கரையில் பனை விதைகள் நட்டு நிகழ்வில், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நேற்று (10.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் நம்ம தங்கா விழிப்புணர்வு சின்னத்தினை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில், ச.அரவிந்த் ரமேஷ், ஜெ. குமரகுருபரன், அஃதாப் ரசூல், எஸ்.வி.ரவிச்சந்திரன் (பெருங்குடி), வி.இ.மதியழகன் (சோழிங்கநல்லூர்), பாலவாக்கம் த.விஸ்வநாதன், டாக்டர் தமிழரசி சோமு மற்றும் அலுவலர்கள், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

## அமுதா ரவிக்குமார் தலைமை - வல்லம் ஒன்றியம்

# தையூர் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 11 –

விழுப்புரம் – மாவட்டம் வல்லம் ஒன்றியம் தையூர் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின் திட்ட’ முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றியப் பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார். உதவி செயற் பொறியாளர் அன்புராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் ராமதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்றத் தலைவர் திருமுருகன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கும், முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு விரைந்து தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முகாமில் தையூர், துடுப்பாக்கம் சொரத்தூர், குறிஞ்சிப்பை, கம்மந்தூர், ஆகிய ஊராட்சிகளில் இருந்து வந்திருந்த ஏராளமான பொதுமக்கள் குடும்ப அட்டை, இலவச வீட்டுமனை பட்டா, பாட்டா மாற்றம், முதியோர் ஓய்வூதியம், மகளிர் உரிமைத் தொகை கேட்டு மனு செய்தனர்.

முகாமில் மேல்சித்தமூர் வட்டார ஆரம்ப சுகாதார மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தனையும் ரத்த அழுத்தம் நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்களை தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை அடங்கிய பெட்டகத்தினை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைநோக்கு சிந்தனையுடன் அனைத்து திட்டங்களையும் விரிவாக்கம் செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களை செய்து வரலாறு படைத்துள்ளார்.

நான்காண்டு கால ஆட்சியை நாடு போற்றுகின்ற வகையில் சாதனைகளை செயல்படுத்தி வருகிறார்.

இதில் ஒரு உன்னதமான திட்டம் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டமாகும் அரசு சார்ந்த அனைத்துத் துறை அலுவலர்களும் பொதுமக்களை நேரில் சந்தித்து மனுக்களைப் பெற்று பதிவு செய்து பொதுமக்களின் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு வருகின்றனர்.

ஒரு கோடியே 15 லட்சம் இல்லத் தரசிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது விடுபட்டுள்ள தகுதி வாய்ந்த அனைத்து மகளிர்களுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை முதலமைச்சர் விரைவில் வழங்க உள்ளதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மானக் குழு உறுப் பினர் செஞ்சி சிவா, ஒன்றியச் செயலாளர்கள் மொடையூர் துரை, இளம்வழுதி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் சரஸ்வதி செல்வராஜ், மழை மேனிபாண்டியன், அசோக்குமார், காமாட்சி சத்தியமூர்த்தி, நிர்வாகிகள் பாண்டிய ராஜன், கண்ணன், லட்சுமணன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் தமிழரசன், கிருஷ்ணமூர்த்தி, கார்வண்ணன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன் நன்றி கூறினார்.






செங்கல்பட்டு திருக்கழுக்குன்றம் பிளஸ்ஸிங்ஸ் பள்ளி குழுமம் 30வது ஆண்டு விழாவில் திமுக மாநில ராஜ சபா பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. ராஜாதி சல்மா கலந்து கொண்டு இரு மொழிக் கொள்கை விளக்கி சிறப்புரையாற்றி பள்ளி சிறந்த மாணவர்கள் மற்றும் சிறந்த ஆசிரியர்களுக்கு பரிசு வழங்கினார். பள்ளியின் நிறுவனர் தாமஸ் ஜெயபால், துணைத் தலைவர் ராஜன் தாமஸ், தாளாளர் எமிமா தாமஸ், முதல்வர் சோபியா அன்புச்செழியன் மற்றும் செங்கல்பட்டு பேரின்பம் மழலையர் பள்ளி நிறுவனர் மு.பி.பா.அன்புச்செழியன் கலந்து கொண்டனர்.




புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர், மூவரசம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ஜி.கே. விவேகானந்தன் (எ)ரவி தலைமையில் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் சார்பில் அவசர செயல்வீரர்கள் கூட்டம் நேற்று கலைஞர் அரங்கம் (மூவரசம்பட்டு பஞ்சாயத்து அலுவலகம் அருகில்) நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருகின்ற 2026ல் சட்டமன்ற தேர்தல் குறித்தும், கட்சி வளர்ச்சிப் பணி குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில் கழகத்தினர் பங்கேற்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் 14வது வட்டம் தியாகராயபுரம் பகுதியில் நடைபெற்ற 13 துறைகளின் மூலம் 43 சேவைகளை மக்களுக்கு நேரடியாக வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பயனாளிகளுக்கு ஆதார் கார்டு மற்றும் மின் விநியோக அட்டை ஆகியவற்றை தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் மற்றும் 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆர்.சந்தர் பானுமதி வழங்கினர். நிகழ்ச்சியில் வருவாய் ஆய்வாளர் சுகந்தா, 14வது வட்ட செயலாளர் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ஆர்.சந்தர், 14வதுஅ வட்ட செயலாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளருமான ஏகா. கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதி குட்டி என்கிற எத்திராஜ், டைலர் பாபு, ஆர். பிரகாஷ், ஆர்.சிவா, கே.விமல், எஸ்.சதீஷ்குமார்,கே.ராஜேஷ், ஏ.நரேஷ் குமார், எம்.பாத்திமா, எம். இளையராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.